# ஆனையிறவில் உக்கிர வான் தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவில் நேற்றைய தினம் முழுவதும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அகோர குண்டுவீச்சுத்தாக்குதலையும் உலங்கு வானூர்திகள் ஷெலிபர் தாக்குதலையும் மேற்கொண்டன. அதே வேளை இராணுவம் உக்கிரமான எறிகணைத் தாக்குதலையும் மேற்கொண்டது.

இத்தாக்குதலில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரண்டு குண்டுவீச்சுவிமானங்கள் இருபத்திரெண்டு தடவைக்கு மேலும் பயணிகள் விமானம் பதினொன்று தடவைக்குமேலும் குண்டுகளை வீசியுள்ளதாகவும் நான்கு உலங்கு வானூர்திகளில் இருந்து பரவலான 50 கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விமானத்தாக்குதல் நேற்று காலை 8 45 மணியிலிருந்து 9 45 மணிவரையும் பின்னர் 9 50 மணியிலிருந்து 11 30 மணிவரையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியிலிருந்து நேற்றுக் காலை ஆறு மணிவரை ஆனையிறவு

4ஆம் பக்கம் பார்க்க.

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

## எயா லங்காவும் பாதுகாப்பில் கவனம்

(கொழும்பு)

எயர் லங்கா சேவையும் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. கொழும்பு நகரில் உள்ள எயர் லங்கா அலுவலகங்களில் பாதுகாப்பு பலமாக உள்ளது.

எயர் லங்கா பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு எயர் லங்கா அலுவலகங்களின் ஊழியர்களை விழிப்புடனும் (4-ஆம் பக்கம் பார்க்க)

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 26 (10 07 - 1991) புதன்கிழமை ஓசை: 142

# புலிகளே தமிழர் பிரதிநிதிகள்; தொண்டமானின் தீர்வுதிட்டம்

## பிரேமதாசா அரசு பரிசீலனை செய்கிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களின் ஏகபோக பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்களுடன் மட்டும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென வலியுறுத்தி சிறிலங்கா அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான திரு. தொண்டமான் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்திருப்பதாக தெரிகிறது. வடகிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைத்து தமிழருக்கு கூடிய சுயாட்சி அதிகாரம் வழங்கும் இத் திட்டம்பற்றி 'புரொண்ட்லைன்' சஞ்சிகையில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

100 நாட்களைக் கொண்ட காலவரம்பினுள் விடுதலைப் புலிகளும் அரசும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்றும், ஆரம்பப் பேச்சுவார்த்தை நிரந்தரம் சம்பந்தமாகவும் வடகிழக்கில் சகஜ நிலையை உருவாக்குவது பற்றியும் அமைய வேண்டுமென்றும், இணைப்பு அதிகாரப் பரவலாக்கம் பற்றி இ

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 3 தமிழர் வெட்டியும் சுட்டும் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் இணைந்து மூன்று தமிழ் பொதுமக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்துள்ளனர். இதில் ஒருவர் வெட்டப்பட்டும், இருவர் சுடப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஐந்து மணியளவில் நிகழ்ந்துள்ளது.

அன்றையதினம் பெரிய போரதீவு, வெல்லாவெளி பாலையடிவெட்டை ஆகிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 2 இலங்கையர் சென்னையில் கைது

(சென்னை)

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக மேலும் இரண்டு பேர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் இரண்டு பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

இவர்கள் வசமிருந்து வயலெஸ் கருவிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் மூலம்தான் ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான முக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வரும் பொருள்கள் கட்டுப்படுத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு கப்பல் மூலம் பொருள்கள் எடுத்து வரப்படுவது கட்டுப்படுத்தப்படவிருக்கின்றது.

இம் மாவட்டத்திற்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தினரால் அனுப்பி வைக்கப்படும் கப்பல்களில் சில தனியார் நிறுவனங்களிற்கும் பொருள்கள் எடுத்து வரப்படும் நடைமுறையில் தீவிர

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணம் இருமடங்கு அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

வெள்ளத்தினாலோ இராணுவ நடவடிக்கைகளாலோ சேதமுறும் வீடுகளுக்கு வழங்கப்பட்ட நட்டஈடு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் என சமூக சேவைகள் பணிப்பாளர் சுற்றறிக்கை மூலம் பணித்துள்ளார்.

மேற்படி நடவடிக்கைகளால் ஏற்படும் சேதங்களுக்கு இதுவரைகாலமும் ஐயாயிரம் ரூபாவே நட்டஈடாக வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் ஏற்படும் நட்டங்களுக்கு பத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு விநியோகம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் மற்றும் தொழில் இழந்தவர்களுக்குரிய இம்மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் இன்று ஆரம்பமாகின்றது.

இம் மாதத்திற்கான விநியோகம் வழமையான அட்டவணைத்திட்டத்தின்படியே மேற்கொள்ளப்படவுள்ளது. எனினும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நான்காவது வாரத்திற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்விற்கு சகலருடனும் பேசவேண்டும்

(லண்டன்)

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக்கொண்டு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கோருகிறோம். என ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க பொதுச் செயலாளரும், சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்

பிரேமச்சந்திரன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாகனம் மீது ஹெலிதாக்கு

(நாவற்குழி)

நேற்றுமாலை ஐந்து மணியளவில் நாவற்குழிச் சந்திக்கு அருகில் கண்டி வீதியில் வந்து கொண்டிருந்த வாகனம் மீது சிறிலங்கா அரசுக்கு சொந்தமான உலங்கு வானூர்தியிலிருந்து கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 5 நிமிடம் நடந்த தாக்குதலில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என அறியவருகிறது

## புளொட் சிறி கைது

பொதுமக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் புளொட் சிறி விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் முன்பு விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலிலிருந்து தப்பியோடியவர் என

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையோர் மீது திணிப்பது அநியாயமானது

(கொழும்பு)

ஒவ்வொரு இனத்துக்கும் தன் மொழிமீது உணர்வார்ந்த பற்றுண்டு. பெரும்பான்மையினர் மொழி என்பதற்காக ஒரு குறிப்பிட்ட மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது அநியாயமானது. பல இனங்கள் ஒரு சமூகமாக வாழும் போது அவர்கள் அனைத்து மொழிகளையும் அறவே கற்க வழிவகை செய்யவேண்டும்

இரண்டாயிரத்து ஐந்நூற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத்தில் மீண்டும் தூதரகம்

(கொழும்பு)

குவைத்தில் சிறிலங்கா அரசாங்கம் பூரணமான அந்தஸ்துடன் கூடிய தூதரகம் ஒன்றை ஸ்தாபித்துள்ளது.

வளைகுடாப்போரின் போது ஏற்பட்ட நெருக்கடிகளினால் மூடப்பட்ட தூதரகம் இப்போதுதான் மீண்டும் உத்தியோகபூர்வமாக தொடக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததற்காக சிறிலங்கா சுங்கம் மீது தாய்வான் வழக்கு தாக்கல்

(மணிலா)

தாய்வானுக்குச் சொந்தமான சுமார் பதினோராயிரம் ராக்கட் மோட்டார் வகை ஆயுதங்களை இலங்கை அரசின் சுங்க இலாகா கடந்த மார்ச் மாதம் கைப்பற்றியுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**மில்க்வைற் சலவைத்தூள்**

ஆற்றல் மிக்க சக்தி வாய்ந்த நுரைவளம் கூடிய ''மில்க்வைற் சலவைத்தூள்'' 50 கிறாம் பக்கற் ரூபா 6/- மட்டுமே! 100 வெறுப் பக்கற் அனுப்பி ஒரு அழகிய லேஞ்சி அன் ளிப் பாசப்பெறுங்கள் மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/2784)

ஜீவிதா
**தொழில நுட்பக்கூடம்**
ரீவி, டெக் றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும், திருத்துபவர்களும், விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (B/2764)

# கப்பல்மூலம் வரும் உணவு போதுமானதாகவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் உணவுப் பொருட்கள் போதுமானதாக இல்லை என்று அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உணவு நிலைமைபற்றி கருத்து வெளியிட்ட அரச அதிபர் தற்பொழுது இம்மாவட்டத்திற்கு வரும் உணவுக் கப்பல்களின் எண்ணிக்கையும் கப்பல்களில் எடுத்துவரப்படும் உணவுப் பொருள்களும் போதுமானதாக இல்லை என்றார்.

அதேவேளை இம்மாதத்திற்கான உலர் உணவு விநியோகமும் உணவுக்கப்பல் வருவது தாமதித்ததால் தாமதமாகவே நடைபெறுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடை கேட்டவர் திருடிச் சென்றார்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக சந்தியில் இருக்கும் தேநீர்க் கடைக்கு வந்த நபர் ஒருவர் வடை தாருங்கள் என கேட்டதும் உரிமையாளர் பின்னால் சென்று வடை எடுத்துக் கொண்டு வருவதற்குள்பாடிக்கொண்டிருந்த ரேடியோவையும் பற்றரிகளையும் வடை கேட்ட நபர் களவாக எடுத்துச்சென்றுள்ளார்.

இந்த சம்பவம் சென்ற வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. (43)

# விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைமுறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று யாழ் கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது. இதில் வேலணை மைதிலிகம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் உடையமைத்தல், தமிழ், ஆங்கிலச் சுருக்கெழுத்துத் தட்டெழுத்துப் பாடநெறிகளில் பயிற்சி பெறும் சகல மாணவர்களையும் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். மேற்படி கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

# 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பையா சத்தியானந்தன்**
(அப்புச்சி)

மண்ணுலகம் 18-06-1963 | விண்ணுலகம் 24-06-1987

திதி: 10-07-1991

அன்பின் செல்வமே அப்புச்சி

நீ மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் எம் இதயங்களில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறாய். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி, சாந்தி, சாந்தி


பிரார்த்திப்பவர்கள்

அம்மா, அண்ணன்மார், அண்ணிமார், பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(R/1522)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்: 03-09-1972



வீர மரணம்: 10-07-1990

**வீரவேங்கை சீனிவாசன்**
(செல்வராசா உமையாளன்)
(ஈசன்)

கொஞ்சு தமிழ் காப்பதற்குச் சிங்களத்தைச் சிதறடிக்க
தூக்கினாய் உன் கரத்தில் துப்பாக்கி
அஞ்சாமல் செங்களமாடிய வேளையிலே
பாதகனின் குண்டொன்று பாய்ந்தது சென்னியதில்
விஞ்சு புலி வீரம்கொண்ட மாவீர! — நீ
காலமதில் வாழுகின்ற தியாகதீபம்
நெஞ்சமதில் நீங்காத நினைவாகி
ஓடி மறைந்தது ஓராண்டு காலம்
கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும்
கரை காண மறுக்கிறது
பதினெட்டு ஆண்டுகள் நீ வாழ்ந்த
பசுமையான நினைவுகளை மீட்டுகிறோம்.

உன் பிரிவுத்துயர் தாங்காது வாடும்

ஐயனார் கோயிலடி, சுன்னாகம் - குடும்பத்தினர்.

(R/1524)

# நினைவு கூருகின்றோம்...

**1991-07-10**



கரும்புலி மேஜர்
**காந்தருபன்**



கரும்புலி கப்டன்
**கொலின்ஸ்**



கரும்புலி கப்டன்
**வினோத்**

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் பொலிகண்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

**வேந்தன்/கிருபா** (தில்லையம்பலம் கிருபாராசா - வல்வெட்டித்துறை)

பழுகாமத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

திருக்கோணமலை, கும்புறுப்பிட்டியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏழு வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 தமிழர்கள்

துன்னாலையில் சிறிலங்காப்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 6 வயதுச் சிறுவன் உட்பட 6 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு வல்வைக் கடற்பகுதியில் சிறிலங்காக் கடற்படைக் கப்பல் மீதான கரும்புலித் தாக்குதலில் வீரமரணமெய்திய

**கரும்புலி மேஜர் காந்தருபன்**
(யோகராசா சோமேஸ்வரன் - குஞ்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

**கரும்புலி கப்டன் கொலின்ஸ்**
(பரிணாந்து சில்வெஸ்டர் - நறுவிலிக்குளம், மன்னார்)

**கரும்புலி கப்டன் வினோத்**
(வேலுப்பிள்ளை இலகராசா - இலகராசா வீதி, காட்டுவளவு, வல்வெட்டித்துறை)

கொக்காவில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பில், முதலாம் நாள் வீரமரணமெய்திய

**மருது** (இராசேந்திரம் சாந்தகுமார் - 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

சம்மாந்துறையில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**புவிராஜ்** (கல்முனை)

மயிலிட்டியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**சீனிவாசன்** (செல்வராசா உமையாளன் - ஐயனார் கோயிலடி, சுன்னாகம்)

கல்முனையில் சிறிலங்காப்படையினராலும், ஜிகாத் அமைப்பாலும் வெட்டிக் கொல்லப்பட்ட 31 தமிழர்கள்

வற்றாப்பளையில் சிறிலங்காப்படையினரின் உலங்கு வானூர்தித் தாக்குதலினால் கொல்லப்பட்ட இளம் பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/2789) - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

## சிந்தனைக்கு

உபதேச மொழிகளை விட, முன்மாதிரிகள் மனதில் பலமாகப் பதிகின்றன.

— ஹென்றீ ஃபீல்டிங்


ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 10.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தபெ.எண் 05


# ஆயுத விநியோகத் தடை மாநாடு

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி கட்டுப்படுத்துவது தொடர்பாக ஐ.நா. சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் பாரீஸில் கூடி ஆராயவுள்ளன. அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய இந்த ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுமே இன்று உலக ஆயுத வர்த்தகத்தில் எண்பது வீதத்திற்கு மேற்பட்ட அளவு மேற்கொள்கின்றன.

வளைகுடாப்போரின்போது அமெரிக்காவிற்கும் அதன் நேச அணியினருக்கும் ஈராக்கின் ஆயுதபலம் அச்சுறுத்தலாக அமைந்ததே இந்த ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக வல்லரசுகள் தீவிர கவனம் எடுப்பதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

தனியாக இது மாத்திரம் காரணமில்லை. எதிர்வரும் காலத்தில் அமெரிக்காவின் படைகளை அமெரிக்காவிற்கு வெளியில் போர் நடவடிக்கையில் பயன்படுத்த அதன் பொருளாதாரம் இடம் கொடுக்காது என்பதே உண்மையாகும். அவ்வாறு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனில் 50 பில்லியன் டொலர்களை அமெரிக்கா கடனாகப் பெறவேண்டி இருக்கும் என அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஹென்றி கிஷிங்கர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், அமெரிக்காவிற்கு வெளியில் போர் சூழல் ஒன்று உருவாகாமல் தடுப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் ஆயுதப் போட்டி ஒன்று உருவாகுவதற்கும் தமது வளங்களின் பெரும்பாகத்தை மூன்றாம் உலகநாடுகள் ஆயுதக் கொள்வனவில் செலவிட்டமைக்கும் கடந்த காலத்தில் வல்லரசுகளுக்கு இடையில் நிலவிய நெடுபிடிப் போரே காரணமாகும்.

மூன்றாம் உலக நாடுகளைத் தமது நலனுக்காக மோதவிட்டமையும், நாடுகளுக்குள் தேசிய இன மோதல்களை உருவாக்கியமையின் பெரும்பங்கு நெடுபிடியுத்தத்தில் ஈடுபட்ட வல்லரசுகளையே சாரும். தென்னாசியாவைப் பொறுத்து பாகிஸ்தான் தனது நிலைமைக்கு ஏற்றதைவிட அதிக இராணுவத்தையும், நவீன தளபாடங்களையும் கொண்டுள்ளது. பாகிஸ்தானுக்கு உதவி என்ற ரீதியில் பலகோடி டாலர் பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கடனாக அமெரிக்கா வழங்கியதே இதற்குக் காரணமாகும். இதேவேளை, பாகிஸ்தானுடன் முரண்பாடு கொண்டிருந்த இந்தியாவும், தனது பொருளாதார நெருக்கடி நிலையையும் பொருட்படுத்தாது பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை சோவியத்தில் இருந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்தது.

அத்தோடு, வல்லரசுகளில் இருந்த இராணுவத் தளபாட உற்பத்தி நிறுவனங்கள் தமது இலாபத்தை மட்டுமே கருத்திற்கொண்டு தமது அரசுகளுக்குத் தெரியாமலே பெருந்தொகை ஆயுதங்களை விற்றன.

இந்நிலையில், மூன்றாம் உலக நாடுகளுக்கான ஆயுத விநியோகத்தைக் கட்டுப்படுத்தல் என்பது வல்லரசுகளின் கையிலேயே இருக்கின்றதே ஒழிய மூன்றாம் உலக நாடுகளிடம் இல்லை. ஆனால், கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே.

சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் தமது ஆயுத ஏற்றுமதி மூலமே பெரும்பகுதி அந்நியச் செலாவணியைப் பெறுகின்றன. இந்நாடுகள் ஆயுதங்களைத் தவிர வேறு கைத்தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்வது குறைவாகும். மேலும், இந்த இராணுவத் தளபாட உற்பத்தியில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கியுள்ளனர். இந்த ஆயுத விநியோகத்தை நிறுத்தினால் அத்தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் என்பது நெருக்கடிக்குள்ளானதாகிவிடும். மூடப்படும் நிலையில் இருந்த 'போபோஸ்' கொம்பனி இந்தியாவின் பீரங்கிக் கொள்வனவால் தனது ஆயுளை நீடித்துக்கொண்டது. அதேபோல் வளைகுடாப் போரினால் அமெரிக்காவிலும் பல கொம்பனிகள் புத்துயிர்ப்புப் பெற்றுள்ளன.

அதேவேளை, பெரும்பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சோவியத் யூனியன் இந்த ஆயுத வர்த்தகத் தடையை ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குரியதே. மேற்குநாடுகளிடம் பல ஆயிரம் கோடி டாலர் கடனை கோரும் சோவியத்தில் இது சாத்தியப்படுவதென்பது சிரமமானதே.

இந்நிலையில், ஆயுத விற்பனைத் தடை என்பது வெற்றி அளிக்குமா என்பது கேள்விக்குரியதாகும். அத்தோடு மூன்றாம் உலக நாடுகள் ஆயுதப்போட்டியில் ஈடுபடாமல் இருப்பதற்கு அவர்களின் பாதுகாப்பு பற்றி வல்லரசுகள் உத்தரவாதம் அளித்தல் வேண்டும். இது பேச்சளவில் நம்பிக்கை ஊட்டமுடியாததாகையால் வல்லரசுகள் ஆயுத உற்பத்தியையும் ஆயுதப் போட்டியையும் நிறுத்த வேண்டும். தம்மிடமுள்ள பயங்கர ஆயுதங்களை அழிக்க வேண்டும். இதைவிடுத்து மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுத விநியோகத்தைத் தடை செய்வது என்பது உலக சமாதானத்திற்கு எந்தவிதப்பங்கும் ஆற்றிவிடப்போவதில்லை.

# மக்கள் யாவரும் கரும்புலியானால் வல்லரசுகளும் நெருங்கமுடியாது

- வீமன்

(மணலாறு)

தமிழீழ மக்கள் அனைவரும் கரும்புலிகளானால் உலகின் எந்த வல்லரசும் எம்மை அணுக முடியாது என கரும்புலி கப்டன் மில்லரின் நினைவு தினத்தை ஒட்டி மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற எழுச்சி விழாவில் உரையாற்றிய மணலாறு மாவட்ட பிரதித் தளபதி வீமன் குறிப்பிட்டார்.

கரும்புலி மில்லர் முதன் முதலாக வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனத்துடன் நெல்லியடி முகாமினுள் சென்று தமது உடலில் ஒரு சிறு துண்டும் இல்லாதவாறு தன்னை அர்ப்பணித்துக் கொண்டான்.

இதேபோல இன்னும் எத்தனையோ வேங்கைகள் தம்மை விடுதலைக்காக வித்திடக் காத்திருக்கிறார்கள். இதேபோல தம்மை எந்த வடிவில் வேண்டுமானாலும் அர்ப்பணிக்கத் தயாராக பெருந்தொகையானோர் முன்வருவார்களானால் எந்த வல்லரசும் எம்மை இலகுவில் வெற்றி கொள்ள முடியாது என்றும் வீமன் அக்கூட்டத்தில் கூறினார்.

இந்த எழுச்சி விழா மணலாறு மாவட்டத்தில் உள்ள செம்மலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் வாகீசம் உரையாற்றினார்.

# சிறிபெரும்புதூரில் வைத்தே குண்டை சிவராஜன் கொடுத்தார்

## ராஜீவ் கொலை தொடர்பாக சி.பி.ஐ. தகவல்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலையின் முக்கிய காரண கர்த்தாவான சிவராஜன் சிறிபெரும்புதூர் கூட்ட அரங்கில் தனுவுடன் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததாகவும், தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்ட தனு என்ற பெண்ணின் முயற்சி தோல்வி கண்டிருந்தால் ராஜீவ் காந்தியை அவர் சுட்டிருப்பார் என்றும் சி.பி.ஐ. விசாரணையின் போது முருகன் தெரிவித்ததாக இந்து தெரிவித்துள்ளது.

எந்த விதத்திலும் கொலை முயற்சி தவறக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில் மிகவும் நுட்பமாக கொலைக்கான திட்டத்தை சிவராஜன் தீட்டியிருக்கிறார். பிரபாகரனுக்கு மிக நெருக்கமானவர் என இப்போது நம்பப்படும் சிவராஜன் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உயர் மட்ட தலைவராவார். இவர் மே 21 ஆம் திகதி காலை சிறிபெரும்புதூர் கூட்ட அரங்கிற்கு வந்து மேடைக்கு அண்மையாகச் சென்று இடங்களை நோட்டம் விட்டுச்சென்றதாகவும் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

நோட்டம் விட்டுச் சென்றதன் பின்னர் சென்னைக்குத் திரும்பிய சிவராஜன், தனு, சுபா, நளினி ஆகியோருடன் சிறிபெரும்புதூருக்கு மீண்டும் மாலையில் சென்றார். தேவையான உபகரணங்களை ஒரு பைக்குள் வைத்தே இவர்கள் கொண்டு சென்றனர். தங்களது நடமாட்டம் குறித்து மற்றவர்கள் சந்தேகிப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த நால்வர் குழுவினர் கூட்ட அரங்கைடஸ்ஸிலேயே வந்தடைந்தனர்.

ஆர்.டி.எக்ஸ் பிளாஸ்டிக் வெடிகுண்டுடன் கொண்ட ஜக்கெட்டை சிறிபெரும்புதூரை வந்தடைந்த பின்னர் தான் தனுவிடம் சிவராஜன் அணியக் கொடுத்தார். ஏனைய புலி உறுப்பினர்களையும் முருகன், ரொபர்ட், பயஸ் போன்ற உடந்தையாளர்களையும் சிவராஜன் கூட்ட அரங்கில் தவிர்த்திருந்தார் என்றும்,

தமிழகத்திற்கு ராஜீவ் காந்தி மே மாதம் விஜயம் செய்யும்போது எங்கு வைத்தென்றாலும் அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்ற புலிகளின் உயர்பீட ஆணையுடன் மே முதல் வாரத்தில் தான் சிவராஜன் இந்தியா வந்தார் என நளினியும் முருகனும் சி.பி.ஐ. விசாரணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

சிறிபெரும்புதூரில் ராஜீவ் உயிர் தப்பியிருந்தால் மறுநாள் (மே 22 ஆம் திகதி) பாண்டிச்சேரி அல்லது கிருஷ்ணகிரியில் வைத்து அவரை கொல்வதற்கான திட்டங்களையும் சிவராஜன் கொண்டிருந்தார் என்று நளினியும்,

கொலை முடிந்த உடனடியாக சிவராஜன், சுபா, நளினி ஆகியோர் சிறிபெரும்புதூரில் உள்ள வீடொன்றுக்குச் சென்று தண்ணீர் அருந்திவிட்டு ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் புலிகள் இயக்க தீவிர வாதியான ரொபர்ட் பயஸின் வீட்டுக்குச் சென்றதாக முருகனும் சி.பி.ஐ. விசாரணையின்போது தெரிவித்தனர்.

# ஆயுத விற்பனையை கட்டுப்படுத்த மாநாடு

(பரிஸ்)

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பது குறித்து பேச்சுவார்த்தை நடாத்த உலகில் எண்பது சதவிகித ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடுகளான பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் மாநாடு ஒன்று பரிஸில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு வெற்றிகரமாக அமைந்தால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் ஆயுதப் புரட்சி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளைகுடாப் போருக்குப் பின்னர் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவை ஆயுதக்கட்டுப்பாடு பற்றி பேசி வருகின்றன. நவீனரக ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் சீனாவும் இப் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றது.

## சோவியத் யூனியனுக்கு

# கைத்தொழில் வளநாடுகள் உதவ முன்வர வேண்டும்

(பேர்லின்)

சோவியத் யூனியன் தனது சீர்திருத்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும்படி பெரிய தொழில் வள நாடுகளை லண்டனில் நடைபெறும் ஏழு நாடுகள் உச்சி மாநாட்டில் தாம் கேட்டுக் கொள்ளப்போவதாக ஜேர்மனிப் பிரதமர் ஹெல்மட் ஹோல் தெரிவித்தார்.

பேர்லினில் சீனச்செய்திநிறுவனம் ஒன்றுக்கு ஹெல்மட் ஹோல் அளித்த பேட்டியில், சோவியத் யூனியனுக்கு உதவி செய்யாவிடில் மேற்கு நாடுகள் தவறு செய்ததாக கருதப்படும் என்று தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதி நிறுவனம் சோவியத் யூனியனையும் தொடர்பு உறுப்பினராக கொள்ள வேண்டும் என்றும் காலப்போக்கில் அதனை முழு உறுப்பினராக்கிக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# சீனாவில் வெள்ளப் பெருக்கு

(பீகிங்)

சீனாவின் எழுபத்திரண்டு நகரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தை தொடர்ந்து கைத்தொழில் விவசாயவேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது பல இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். பெருந்தொகையானோர் மடிந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

# ஆங்கிலத் தின விழா

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் ஆங்கிலத் தின விழா எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும். மேற்படி விழா பாடசாலை அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும். விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
(43)

# பதிவுத்தாள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் மீண்டும் பதிவுத்தாள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அங்கு இன்னும் ஒரு சில நாள்களே பதிவுக்கு இருப்பதாகவும் இன்னும் இது தீர்ந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

# அஸாத் காஷ்மீர் பிரதமர் தடுப்புக் காவலில்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள அஸாத் காஷ்மீரின் பிரதம மந்திரி மும்தாஸ் ஹூசெய்ன்ரதோரியை பாகிஸ்தானிய அரசாங்கம் பதவியிலிருந்து நீக்கியதோடு கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற காஷ்மீர் தேர்தலின் பின்னர் பிரதமர் பல குழப்ப நடவடிக்கையில் ஈடுபட்டதாக காஷ்மீர் விவகாரங்களுக்கான அமைச்சர் மேத்தாப் அஹம்ட் கான் கூறியுள்ளார்.

அரசியலமைப்புக்கு மாறாகவும் சட்ட ரீதியற்ற வகையிலும் மேலும் அவர் செயற்படாமல் தடுப்பதற்காகவே அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதாக பாகிஸ்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் தேர்தலில் தன்னைத் தோற்கடிக்க இஸ்லாமபாத் அரசு பெருமளவு ஊழல்கள் செய்ததாக ஹூசெய்ன்ரதோரி தெரிவித்துள்ளார். இவரது கட்சி தேர்தலில் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## விரிவுரைகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

விஞ்ஞான பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆங்கிலமொழி மூலமாகவும் வர்த்தக, கலைப் பிரிவிற்கான விரிவுரைகள் தமிழ், ஆங்கில மொழியிலும் நடைபெறும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

# உண்ணா விரதத்தை ராமதாஸ் கைவிட்டார்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ் நேற்றுத் தன் உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநிலத் தலைவர் அப்துல் ஸமது கொடுத்த இளநீரைப் பருகி அவர் உண்ணாவிரதத்தை முடித்தார்.

டாக்டர் ராம்தாஸ் தனது உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் மீண்டும் கேட்டிருந்தார்கள்.

இது தொடர்பாய் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தும் அளவிற்கு இப்போது என்ன நடந்துவிட்டதென்று கேள்வி எழுப்பிய ஜெயலலிதா உலகெங்கிலும் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசிற்கு ஆறுமாத காலமாவது அவகாசம் தருவது மரபு ஆனால் பதவியேற்ற உடனேயே போராட்டத்தை நடத்துவது முதலமைச்சர் ஒரு பெண் என்ற பொறாமைதான் காரணம் என்று கூறினார்.

இதேவேளை, டாக்டர் ராம்தாஸ் உண்ணாவிரதத்தைக் கைவிட்ட பிறகு மாலையில் வெளியிட்ட அறிக்கையென்றில், பண்டுருட்டி ராமச்சந்திரன் இனியும் சட்டப் பேரவையில் அவமதிக்கப்படமாட்டார் என்று உறுதிமொழி முதல்வரால் வழங்கப்பட்டால் அன்றி அவர் பேரவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மாட்டார் என்று கூறியிருக்கிறார்.

# 202 பேருந்துக்கள் தமிழகத்தில் சேதம்

(சென்னை)

டாக்டர் ராம்தாஸ் உண்ணாவிரதம் தொடர்பாக தமிழ் நாட்டில் ஆங்காங்கே நடந்த சம்பவங்களில் மொத்தம் 5653 பேர் கைது செய்யப்பட்டனர் 202 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், 750 இதர வாகனங்களும் சேதமடைந்தன. அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு மட்டும் ரூபா 48 லட்சம் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் தெரிவித்தார். பொலிஸார், போக்குவரத்துத் தொழிலாளர் உட்பட 37 பேர் காயமடைந்தார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### மேலும் 2 இலங்கையர்

யஸ்தர் ஒற்றைக்கண் சிவராஜன் இலங்கையிலிருந்த விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்று இந்தியப் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட 26 வயது உதயனும், அவரது மாமனாரான 55 வயது நிரம்பிய பாஸ்கரனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வந்து சிவராஜனின் உதவியுடன் சென்னையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் தங்கியிருந்தார்கள்.

கைது செய்யப்பட்ட இரண்டு பேரும் நேற்று செங்கல்பட்டு நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டார்கள். இவர்களை முப்பது நாட்கள் பொலிஸ் காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த இரண்டு பேரையும் சேர்த்து ராஜீவ்காந்தி கொலைவழக்கில் மத்திய புலனாய்வுத்துறை சிறப்புப் புலனாய்வுப் பிரிவு மொத்தம் 12 பேரைக் கைது செய்துள்ளது. இவர்களில் 8 பேர் இலங்கைத் தமிழர்கள்.

### உலர் உணவு

கும் உணவு விநியோகத்தை மேற்கொள்வது தொடர்பாக செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக செயலகத்தில் இருந்து இறுதியாகப்பெறப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஈ)

### கப்பலில்

கட்டுப்பாடு கொண்டுவரும் தற்கு யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு தீர்மானித்துள்ளது.

தனியார் நிறுவனங்களிற்கு இங்கு வரும் கப்பல்களில் உணிசமான பொருள்கள் எடுத்து வரப்படுவதால் இம் மாவட்ட மக்களுக்கான நிவாரண விநியோகத்திற்கான பொருள்கள் குறைவாகவே எடுத்துவர வேண்டிய நிலை ஏற்படுவதாலேயே மேற்படி தீர்மானம் மேற் கொள்ளப் பட்டிருப்பதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஈ)

### மட்டக்களப்பில்

இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் இணைந்து திக்கோடை, தும்பன்கேணி, நாற்பதாம் கிராமம் ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்துத் தேடுதலை மேற்கொண்டனர்.

இத்தேடுதலின் போதே வேலாயுதம் தேவகுமாரன் (வயது 19 திக்கோடை,) நான்கு பிள்ளைகளின் தந்தையான குமாரசாமி இரத்தினம் பிள்ளை (வயது 36 திக்கோடை), கணபதிப்பிள்ளை செல்வநாயகம் (வயது 16 திக்கோடை) ஆகிய மூவரும் இராணுவத்தாலும், ரெலோவினராலும் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

### ஆனையிறவில்

முகாமில் இருந்த இராக்கச்செப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

### புலிகளே

தரப்பினரும் பேசவேண்டும் என்றும் இத்திட்டத்தில் கூறப்படுகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மாகாண சபைத் திட்டத்திற்கு மேலாக கூடிய சுயாட்சி அதிகாரமுடைய அமைப்பு ஒன்றை உருவாக்குவது பற்றியும் இத் தீர்வுத் திட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வன்முறையைக் கைவிடுவதாக புலிகள் இணங்கும் பட்சத்தில் இறிலங்கா அரசும் அதேபோன்று ஒரு பிரகடனத்தை செய்ய வேண்டுமென்றும். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரும் நிபந்தனையின்றி போர் நிறுத்தம் அறிவிக்கவேண்டுமென்றும் இத் தீர்வு திட்டத்தில் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பிரேமதாசா அரசு இத் தீர்வுத் திட்டத்தை பரிசீலனை செய்து வந்ததாகவும், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதை அடுத்து இத் திட்டம் பின் போடப் பட்டிருப்பதாகவும் 'புரொண்ட்லைன்' சுருத்துத் தெரிவிக்கிறது.

### வெள்ள

ஆயிரம் ரூபாவை வழங்குமாறு மேற்படி சுற்றறிக்கை மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அகதிகளுக்கு வழங்கப்படும் சமைத்த உணவுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சமைத்த உணவுக்கான கொடுப்பனவு 15 ரூபாவில் இருந்து 25 ரூபாவாகவும் பன்னிரண்டு வயதுக்குட்பட்டோருக்கான கொடுப்பனவு 8 ரூபாவிலிருந்து 15 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### சிறுபான்மை

வருட பாரம்பரியம் உள்ள எமது நாடு, குறுகிய கால வரலாற்றினை உடைய அமெரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். எமக்கிடையில் இன்று நிலவும் குரூரங்களுக்குக் காரணம் 1950 நடுப்பகுதியில் நிலவிய மனோபாவமாகும் என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

### புளொட்

மது குறிப்பில் தந்தது: இவரைப் பற்றிய விபரங்கள் விடுதலை புலிகள் பத்திரிகையில் வெளிவந்திருந்தது தெரிந்ததே

### சிறலங்கா

ளைதயடுத்து தாய்வான் அரசு இலங்கை சுங்க இலாகா மீது வழக்குத்தொடர்ந்துள்ளது.

தாய்வான் நாட்டிற்காக பெல்ஜியத்தில் வாங்கப்பட்டு கப்பலில் ஏற்றிவரப்பட்ட மோட்டார் வகை ஆயுதங்களை இலங்கை அரசுகைப்பற்றியதென்றும், ஆனால் கப்பலில் ஏற்றி வரப்பட்ட பாகங்கள் ஆயுத தளபாட வகையைச் சேர்ந்தவையல்ல வென்றும் இவை தாய்வானின் பாதுகாப்பிற்காக வாங்கப்பட்ட ஆயுதங்கள் என்றும் தாய்வான் செய்திப்பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

### இனப்பிரச்சினை

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வகட்சி மகாநாட்டில் பத்தொன்பது அம்சக் கோரிக்கையை சமர்ப்பித்துள்ளோம் அதன்மூலம் வடக்கு, கிழக்கு மாகாண அரசுக்கு மேலதிக அதிகாரங்களைக் கொடுப்பது சம்பந்தமாகவும், வடக்கு கிழக்கு இணைந்த பிராந்தியத்தில தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அந்தத் தீர்வு உருவாக்கப்பட வேண்டும் என்றும் கோரிவருகின்றோம் எனக் கூறியுள்ளார்.

இலங்கையில் இருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுமானால் அடிப்படையாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க சிறிலங்கா அரசு முன்வரவேண்டும்; அதற்காக சிறிலங்கா அரசு சகல தமிழ் கட்சிகளுடனும் குழுக்களுடனும் பேச்சு நடத்த வேண்டும் எனவும், புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார்.

### எயர் லங்காவும்

அதனத்துடனும் செயலாற்றும்படி எச்சரித்துள்ளது. ஊழியர்கள் கடமையின் போது, அடையாள அட்டைகளை தெளிவாகத் தெரியக்கூடிய இடத்தில், இடுப்புக்கு மேல் அணிந்திருக்கும்படி பணித்துள்ளது. அலுவலகக் கட்டடங்களில் சந்தேகத்துக்கிடமானவர்களை விசாரிக்கும் படியும் ஊழியர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டத்தைப் பற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவமணி சுப்பிரமணியம்

வண்ணார்பண்ணை சோலிக் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவமணி 6-7-91 இரவு காலமானார் இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், லோகநாதன் (யாழ் மாநகரசபை பிரதம மின்மாணி வடிப்பாளர்), கனகேஸ்வரி, ஏகாம்பரநாதன் (சோலைவரிப்பகுதி நடுக்கட்டு உத்தியோகத்தர், யாழ் சரணர் சமித் உமா ஆ.ச.சே), பேரின்பநாதன், ருக்மணிதேவி (யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயம்), நாகேஸ்வரி, குகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராசா (மெக்கானிக்), புஷ்பராணி, தேவராணி, யோகமலர், பாலகிருஷ்ணன் (கூட்டுறவுத் திட்டமிடல்பணிப்பாளர் கச்சேரி யாழ்ப்பாணம்), பூபாலசிங்கம் ஆகியோரின் மாமியாரும், பூமணியின் சகோதரியுமாவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-07-91 இன்று புதன்கிழமை நடைபெறுமென ஏற்கனவே நேரடியாகவும், உறவினர் மூலமாகவும் அறிவித்திருந்தபோதும் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் 11-07-91 நாளை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடாத்தப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்; இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

41, சோலிக் பிள்ளையார் கோவிலடி, வண்ணார்பண்ணை.

தகவல்: சு. லோகநாதன்

(R/1530)

## தவில் மாமேதை இணுவையூர் N. R. சின்னராசா

லயஞான திலகம் திரு. N. R. சின்னராசா அவர்கள் இறைபதம் எய்தினார்;

இவர் காலஞ்சென்ற திரு N. இரத்தினம் திருமதி பாக்கியம் இரத்தினத்தின் தலைப்புதல்வரும், இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன் முரளிதரன் (U K), கோபிதரன், திருமதி K. ரஜனி, நரேந்திரன் (இந்தியா), சுதாகரன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், திரு. N. கேதீஸ்வரனின் (பொறியியலாளர்) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி கமலாம்பாள், காலஞ்சென்ற நாதசுர வித்துவான் N. R. கோவிந்தசாமி, காலஞ் சென்ற திருமதி செல்லம்மா, திருமதிகள் ஜெகதாம்பாள், சத்தியபாமா, சாரதாம்பாள், வேதநாயகி, நாதசுர வித்துவான் N. R சந்தானகிருஷ்ணன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ் சென்ற கோவிந்தராசா, திருமதி தனபாக்கியம் காலஞ்சென்ற பெரியநாயகம், திருவாளர்கள் சுப்பிரமணியம், கணேசன், வாதவூரன், விநாயகமூர்த்தி, திருமதி யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் 11-07-91 வியாழக்கிழமை (நாளை) காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், கலையுலக நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்;

கந்தசுவாமி கோயிலடி, இணுவில்;

தகவல்: மனைவி, மக்கள் மருமகன்.

(R/1531)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.